# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2064/50 - 2018 අප්‍රේල් මස 01 වැනි ඉරිදා - 2018.04.01

*2064/50 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

(முதலாவது அட்டவணையின் 10(i) (ஆ) (ii) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்)

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 194 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் முதலாவது அட்டவணையின் 10(i) (ஆ) (ii) ஆம் பிரிவின் கீழ் நிதி நிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்டுள்ள நிதி தொடர்பில் சிரேஷ்ட பிரசை ஒருவருக்கு செலுத்தப்படுகின்ற வட்டியிலிருந்து வருமான வரியினைக் கழிப்பனவு செய்வதற்காக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் 2018 , ஏப்பிறல் 01 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் பிரகடனப்படுத்தப்பட்ட கட்டளை.

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு 01,
2018, ஏப்பிறல் 01.

**ஒழுங்கு விதிகள்**

(அ) அட்டவணையின் பகுதி I இன் கீழ் வீதத்தினை ஏற்புடமையாக்கல் ;

(ஆ) அட்டவணையின் பகுதி II இன் கீழ், நிதி நிறுவனத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத்தொகை தொடர்பில், சிரேஷ்ட பிரசையொருவருக்கு வட்டிக் கொடுப்பனவைச் செலுத்தும்போது அவ்வட்டியிலிருந்து நிறுத்தி வைத்தல் வரி முறையானது குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது.


1A - PG 3983 — 507 (2018/04)



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*அட்டவணை*

*(பகுதி I)*

| *நிறுத்திவைத்தல் வரிக்கு உட்படற்பாலதான வட்டி வருமானம்* | *நிறுத்தி வைத்தல் வரி வீதம்* |
|---|---|
| *சிரேஷ்ட பிரசை ஒருவரின் வரி மதிப்பீட்டாண்டில் நிதி நிறுவனத்திற்கு பெறும் அவரது மொத்த வட்டி வருமானம் ரூபா 1,500,000 ஐ விஞ்சுவதாக பிரகடனப் படுத்தியிருப்பின் மேலதிகங்கள்* | 5% |

**பகுதி II**

**பிரகடனம் :**

*சிரேஷ்ட பிரசை ஒருவரினால் நிதி நிறுவனமொன்றில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பேணிச் செல்லப்படுகின்ற ஒவ்வொரு வங்கிக் கணக்குக்குமாக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு அமைய பிரகடனமொன்றினை ஒவ்வொரு மதிப்பீட்டாண்டிலும் வழங்கப்படுதல் வேண்டும்.*

**உண்மைக்குப் புறம்பான அல்லது கவனத்தினை திசை திருப்புகின்ற பிரகடனம் :**

*சிரேஷ்ட பிரசை ஒருவரினால் நிதி நிறுவனத்திற்கு வழங்கப்படுகின்ற உறுதிமொழி, அறிவித்தல் அல்லது சான்று ஒன்று, சட்டத்தின் 181 ஆம் பிரிவின் நோக்கத்திற்காக வரி அலுவலர் ஒருவருக்கு பிரகடனப்படுத்தப்படுகின்ற அறிவித்தலொன்றாகக் கருதப்படும்.*

*சிரேஷ்ட பிரசைகளுக்காக-*

**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்**

............................................................................
............................................................................
............................................................................
............................................................................
............................................................................ *அவர்களுக்கு*
*(நிதி நிறுவனத்தின் பெயர், முகவரி)*

*கணக்கிலக்கம்/ இலக்கங்கள் :*...............................................................

*வரிமதிப்பீட்டாண்டு :*...........................................................................

**பிரகடனம் (சிரேஷ்ட பிரசை ஒருவரின்) :**

............................................................................ *(முழுப்பெயர்)* ............................................................................ *ஆகிய நான்* ............................................................................ *(முகவரி) இல் வசிக்கும் இத்தால் பிரகடனப்படுத்துவதானது,-*

*(1) ஒருவர் நிதி நிறுவனங்களிடமிருந்தான வட்டி வருமானம் தொடர்பில் வட்டி வருமானம் ரூபா 1,500,000 நிவாரண உரிமைக் கோரிக்கையை ஏற்கனவே கோரியுள்ள வேளையில் மொத்த வட்டிக் கொடுப்பனவிலிருந்து வரி விலக்கழிக்கப்படுதல்.*

*(2) ஒருவர் நிதி நிறுவனங்களிடமிருந்தான வட்டி வருமானம் தொடர்பில் வட்டி வருமானம் ரூபா 1,500,000 நிவாரண உரிமைக் கோரிக்கையை கோரியிராத வேளையில் ரூபா 1,500,000 நிவாரணத்தை விஞ்சுகின்ற மேலதிக வட்டிக் கொடுப்பனவிலிருந்து வரி கழிக்கப்படுதல்.*

(3) ஒருவர் நிதி நிறுவனத்திடமிருந்தான வட்டி வருமானம் தொடர்பில் ரூபா 1,500,000 நிவாரண உரிமைக் கோரிக்கையைக் பார்க்கிலும் குறைவான தொகையை ஏற்கனவே கோரியுள்ள வேளையில் சம்பந்தப்பட்ட நிதி நிறுவனத்தினால் செலுத்தப்பட்ட ரூபா 1,500,000 மொத்த நிவாரணத் தொகையை விஞ்சுகின்ற மேலதிக வட்டிக் கொடுப்பனவிலிருந்து வரி கழிக்கப்படுதல்.

(வரி செலுத்துநரால் ஏற்கனவே நிவாரண உரிமைக் கோரிக்கை செய்யப்பட்டமை கருத்திற்கொள்ளப்பட்டு)

***பிரகடனம் (சிரேஷ்ட பிரசையினால்) :***

................................................................................................................................................................ சேர்ந்த

(முகவரி) ................................................................................................................................................ ஆகிய நான்

(முழுப்பெயர்) பின்வருமாறு பிரகடனம் செய்கின்றேன்.

(1) நான் சிரேஷ்ட பிரசையொருவராவேன். இதற்கமைய நிதி நிறுவனங்களிடமிருந்தான மொத்த வட்டி வருமானத்தின் மீது ஏற்புடைத்தான நிவாரணத்திற்கு (ரூபா 1,500,000) நான் ஏற்கனவே கோரிக்கை செய்துள்ளேன்/நான் ஏற்கனவே ரூபா .......................................... வரை கோரிக்கை செய்துள்ளேன்.

(2) எனது வருமான வரிக்கோவை இல. (இருப்பின்) :-

(3) எனது அடையாள அட்டை இல. :-

(4) ............................................................................................ (வேறு ஏதாவது இருப்பின்) மேலே என்னால் செய்யப்பட்டுள்ள பிரகடனம் உண்மையானதும், சரியானதுமென உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................................,

பிரகடனம் செய்பவரின் கையொப்பம்.

திகதி :.............................................

* (தயவுசெய்து பொருத்தமற்ற கூற்றுக்களை வெட்டி விடவும்.)

*04-836*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.